மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, உரிமைக்குப் போராடிய, மானமே பெரிது என்று நினைத்த கட்ட பொம்மன் பெயரிலே இந்தக் கண்மாய் இருப்பது கண்டு உள்ள படியே மகிழ்ச்சியடைகிறோம். அதே நேரத்தில் இந்தக் கண் மாயின் பரப்பளவு 27 ஏக்கர், இதனால் பாசனம்பெறும் பரப்பு 68 ஏக்கர்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எலத்தூர் தொழுநோய் மருத்துவமனை.

*வினா எண் 605—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம் போளூர் வட்டம் எலத்தூர் தொழுநோய் மருத்துவமனையை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) தற்போது உள்ள படுக்கைகள் எவ்வளவு?

(இ) மருத்துவர்கள் எத்தனை பேர் ?

(ஈ) சிகிச்சை பெறும் வெளி உள் நோயாளிகள் எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) தற்போது கட்டுப்பாடு நிலையத்தில் படுக்கைவசதி கள் ஏதும் இல்லை.

(இ) ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிகின்றார்.

(ஈ) தற்போது சிகிச்சைப்பெறும் வெளிப்புற நோயாளிகளின் களின் எண்ணிக்கை : 6,082.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஏற் கெனவே அந்த எலத்தூரில் இருக்கிற தொழுநோய் சென்டரைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஏற் கெனவே அந்த ஆஸ்பத்திரியை கட்டும்போது படுக்கை வசதி செய்யப்பட்டிருந்தது. பிறகு, போதிய கட்டிட வசதி இல்லை என்று சொல்லி, டி.எம்.ஓ. அங்கிருந்த படுக்கைகளை பல்வேறு ஆஸ்பத்திரிகளுக்கு கொடுத்துவிட்டார். இப்போது அமைச்சர் அவர்கள் கட்டிடம் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். கட்டிடம் கட்டிய பிறகு, அரசாங்கம் அங்கே படுக்கை வசதி செய்துதருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி லெப்ரசி கன்ட்ரோல் யூனிட் பற்றியதாகும். ஒவ்வொரு ஆண்டும் அந்த இடத்திற்கு வந்து நோயாளிகள் தங்

1981 ஏப்ரல் 4]

கள் பெயர்களை ரெஜிஸ்தர் செய்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்த்தால் சென்ற ஆண்டு 542 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். அந்த நோயாளிகளுக்கு படுக்கை வசதி தரவேண்டுமென்று லெப்ரசி கன்ட்ரோல் யூனிட் கருதினால் உடனடியாக அதற்குப் பக்கத்தில் இருக்கிற திருவண்ணாமலை லெப்ரசி கன்ட்ரோல் யூனிட், திருப்பத்தூர் அர்பன் லெப்ரசி சென்டர், வெல்லூர், செயின்ட் தாமஸ் ஆஸ்பத்திரி, சேத்துப்பட்டு ஆகிய படுக்கை வசதியுள்ள இடங்களுக்கு அனுப்புவார்கள்.

[முற்பகல் 9–50]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு அமைச்சர், அவர்கள் பதில் சொல்லி இருக்கின்றார்கள். ஆனால், இந்த கன்ட்ரோல் யூனிட் அங்கே ஆரம்பிக்கின்றபோதே இந்த நோயினால் அவதிப்படுபவர்கள் அதிகமான பேர் இருக்கின்றார்கள் என்ற ஒரே காரணத்தால்தான் படுக்கை வசதி ஏற்படுத்துவதற்கு அரசாங்க உத்தரவு இடப்பட்டது. ஆனால், இன்றைக்கு வேறு ஏதோ காரணத்தாலோ அல்லது பொலிட்டிக்கல் பிரஷர் காரணத்தாலோ அங்கு கட்டடங்கள் கட்டப்படாமல் நிறுத்தப்பட்டது என்பது அரசுக்கு தெரியுமா ? மேலும், அங்கு, 6,000 பேர்களுக்கு மேற்பட்ட நோயாளிகள் வருகின்றனர். அவர்களில், மிகக் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பின்தங்கின சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தங்குவதற்கு உரிய வசதிகள் இல்லை. இதுபற்றி அரசு யோசித்து அந்த இடத்திலே படுக்கை வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, 1963-லே 783 பேர்கள் அந்த இடத்திற்கு வந்த நோயாளிகளின் எண்ணிக்கை 1979-லே 542 பேர்கள் வந்தனர். 1978-லே 414 பேர்கள் வந்தனர். 1977-லே 86 பேர்கள் வந்தனர். ஆகவே, தற்போது நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டுதான் வருகின்றது.

மேலும், அங்கு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை 1979 ஆம் ஆண்டு 1,000 -க்கு 2.9 பேர்கள் என்று இருந்தது. 1980 ஆம் ஆண்டில் 1,000 க்கு 2 பேர்களாக குறைந்துள்ளது. ஆகவே அங்கே படுக்கைகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.- அப்படி அங்கே படுக்கைகள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் கொஞ்சம் ஆராயலாம். ஆனால், இப்போதிருக்கிற நிலைமையில் அங்கே படுக்கை வசதிகள் ஏற்படுத்துவதற்குரிய வாய்ப்பு இல்லை.